12th September 1958]

SRI N. R. THIAGARAJAN : பாக்கியுள்ளவர்களின் பெயர்கள் அடங்கிய ஜாபிதா கொடுக்க முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி ஜாபிதா என்னிடத்தில் இல்லை.

Dharangadhara Chemical Factory

*181 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகாவில் ஆரம்பிக்கப்படும் தாரங்கதாரா கெமிகல் தொழிற்சாலைக்காக நில ஆர்ஜிதம் காரணமாய் வேலை இழக்கும் உப்புத் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) வேலை இழக்கும் உப்புத் தொழிலாளர்களுக்கு அக் கம்பெனியில் வேலைகளுக்கு முன்பாத்தியதை வழங்க ஏற்பாடு செய்ய ஏதேனும் உத்தேசமுண்டா?

THE HON SRI R. VENKATARAMAN : (அ) About 900 to 1,000 workers.

(ஆ) The company has assured the Collector of Tirunelveli that such of the affected salt workers who satisfy their requirements will be preferred to others for employment in the factory.

*182 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகாவில் ஆரம்பமாகும் தாரங்கதாரா ரசாயனத் தொழிற்சாலை உபயோகத்திற்கு ஆர்ஜிதம் செய்யப்படும் பட்டா நிலங்களுக்கு தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா?

(ஆ) அதன் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. Two petitions, one from Sri M. S. Selvarajan, M.L.A., and the other from Sri S. Vinayaga Nadar, were received. The requests contained in the petitions were duly considered by the Special Deputy Collector in charge of the acquisition of lands in Tirunelveli district for the Dharangadhara Chemical Works, Limited. No action was considered necessary on the request, as reasonable compensation was paid to the land-owners.

SRI K. ANBAZHAGAN : இந்த கெமிகல் பாக்டரி தொழிற்சாலையில் இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்கட்கு வேலையளிக்க முதலில் சலுகை கொடுப்பதற்கு வழி செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது உப்பு தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள் நிலத்தை இழக்கிறார்கள். அவர்களுக்கு முதல் சலுகை கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM : நிலத்திற்கு நஷ்டஈடு கொடுப்பது எந்த அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது? இந்த நிலத்தின் மூலம் அவர்கள் சம்பாதித்து வந்த ஊதியம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா? அல்லது அந்த வட்டாரத்தில் நிலத்திற்கு இருக்கக்கூடிய மதிப்பை மட்டும் எடுத்துக்கொள்கிறார்களா?

[12th September 1958

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சட்டம் நன்றாகத் தெரியும். நில ஆர்ஜித சட்டத்தின் பிரகாரம் பல விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி என்ன நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்படுகிறது. காம்பென்சேஷன் போதாது என்று நினைக்கிறவர்கள் 10-வது பிரிவின் பிரகாரம் கோர்ட்டுக்குப் போகலாம். ஆகவே இதில் சர்க்கார் தலையிடுவதற்கு இல்லை.

SRI A. VEDARATHNAM : இந்தத் தொழிற்சாலை எப்போழுது வேலை துவங்கும்? அதனுடைய உற்பத்தி அளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தத் தொழிற்சாலை 1959–60-ல் தொடங்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இயந்திரங்கள் எல்லாம் இப்பொழுதுதான் வந்துகொண்டிருக்கின்றன. நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்த நில ஆர்ஜிதமானது சர்க்காருடைய தேவைக்காக அல்ல. ஒரு தனிப்பட்ட முதலாளிக்காக. சர்க்காருக்கு அதில் பங்கு இருக்கலாம். தொழிற்சாலைகள் வளரவேண்டியது அவசியம்தான். அதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வதை ஆட்சேபிக்க முடியாது. ஆனால் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிற காரணத்தினால், கோர்ட்டுக்குப் போய் வழக்காடி போதுமான நஷ்டஈடு பெறுவது சாத்தியமில்லை. ஆகவே சர்க்கார் தலையிட்டு போதுமான நஷ்டஈடு வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏழைகள் என்ற காரணத்திற்காக சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் செய்ய முடியாது. நில ஆர்ஜித சட்டத்தின் பிரகாரம் நஷ்டஈடை நிர்ணயிப்பதற்கு கலெக்டருக்கு உரிமை இருக்கிறது. சட்டப்படி எந்த அளவுக்குக் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்கிறார்கள். அது போதாது என்று நினைக்கிறவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டும்.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரசாயனப் பொருள்கள் எவை?

THE HON. SRI R. VENKATARAMAN : முக்கியமாக "காஸ்டிக் ஸோடா".

SRI K. B. S. MANI : இந்தத் தொழிற்சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் ஏழைகளுடையது. ஆகையால் அவர்கள் வாழ்க்கை நடத்துவது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. ஆனால் தனிப்பட்ட முதலாளி இந்தத் தொழிற்சாலையின் மூலம் நல்ல வருவாயை சம்பாதிக்க முடியும். நல்ல லாபமும் கிடைக்கும். ஆகவே, கோர்ட் மூலமில்லாமல், அந்த முதலாளிக்குக் கிடைக்கும் லாபத்தைக் கருதி அவரிடமிருந்து அதிகத் தொகை வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் உதவி செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தயவுசெய்து சட்டத்தைப் புரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறபொழுது நில ஆர்ஜிதச் சட்டத்தின் பிரகாரம்தான் செய்யவேண்டும். வேறு எந்த முறையிலும் செய்ய முடியாது. ஒரு எக்கருக்கு 1,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது போதாது என்று சொன்னால், சாதாரணமாக கோர்ட்டில் போட்டுத்தான் அதிகத் தொகை வாங்கவேண்டும். இதிலே சர்க்கார் எப்படித் தலையிட்டு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை.

SRI M. KALYANASUNDARAM : தனியார் துறையில் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் தனிப்பட்ட முறையில் இப்பொழுது செய்துகொண்டு வருகிறோம். சட்டப்படி செய்வதில் பல கஷ்டம் இருப்பது

12th September 1958]

தெரிந்திருக்கிறது. ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னால் ‘ பிரைவேட் நெகோஷியேஷன் ’ செய்து அந்த நிலத்தை வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்கு அதற்கு முன்னால் ‘ பிரைவேட் நெகோஷியேஷன் ’ இருந்ததா என்பது தெரியவில்லை. ‘ லாண்டு அகுவிஸிஷன் ’ தான் நடந்துகொண்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்படி ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலம் எத்தனை எக்கர் இருக்கும் ? வேறு இடத்திலே பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் நிலம் இருந்தால் அதை வாங்கிக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது 50 ‘ சால்டு பான் ’ இருக்கக்கூடிய இடம். எக்கர் அளவைப்பற்றி சரியான விவரம் இல்லை. இந்த இடத்தில் பாக்டரி வைத்து காஸ்டிக் சோடா முதலிய கெமிகல்ஸ் செய்ய முடியும் என்ற நோக்கத்தோடு இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

Kallagam Odai Scheme

*183 *Q.*—SRI V. K. KRISHNAMURTHI (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the investigation of the Kallagam Odai Scheme in the Lalgudi taluk, Tiruchirappalli district, has been completed;

(*b*) if so, the details thereof; and

(*c*) when it will be taken up for execution?

THE HON. SRI P. KAKKAN : (*a*), (*b*) & (*c*) The investigation has not yet been completed. The question of execution can be considered only after the investigation is completed, and the scheme is found worthwhile pursuing.

Pathway

* 184 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ஸ்தலஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆகஸ்ட் 10உயில் நன்னிலம் தாலூகா, பண்டார ஓடை, கொந்தை ஆதிதிராவிட தெருவிற்கும் சுடுகாட்டிற்கும் இடையே நடைபாதை அமைக்க வேண்டுமென்று கொடுத்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(ஆ) அதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(இ) எப்போது மேற்படி வேலை ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No such petition has been received.

(*b*) & (*c*) Does not arise.

Sanitary amenities

*188 *Q.*—SRI V. K. KRISHNAMURTHI (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount sanctioned and the amount actually spent, districtwar, towards the provision of sanitary amenities in 1955–56 ?

THE HON SRI M. A. MANICKAVELU : The time and labour involved in collecting the particulars will not be commensurate with the purpose that they may serve.